Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 339

புதன்கிழமை
30 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 13
வள்ளுவர் ஆண்டு 2055

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50




# சாவகச்சேரி நீதிமன்றுக்கு கிளைமோர் அச்சுறுத்தல்!

## தொலைபேசி அழைப்பையடுத்து நேற்று உச்சக்கட்டப் பாதுகாப்பு

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30**

**சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்கு நேற்றுக் கிளைமோர் ரக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு தீவிர தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன.**

15



# ஆசிரியர் பற்றாக்குறை வவு.வில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா. ஒக். 30

வவுனியா – செட்டிக்குளம், அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவர்கள்

15




“ஆட்சி மாறினாலும் காட்சி மாறது எண்டது உண்மைதான் பாருங்கோ”

## விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்., ஒக். 30

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்

15

## பலாலி சர்வதேசவிமானநிலையத்தை விரிவாக்கம் செய்ய நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் – பலாலி சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

15

## யானை தாக்கி இளைஞர் பலி

வவுனியா, ஒக். 30

வவுனியா, செட்டிகுளம் கிறிஸ்தவகுளம் பகுதியில் யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

15

## பிரிக்ஸில் இணைவதற்கு இலங்கைக்கு வாய்ப்பில்லை

கொழும்பு, ஒக். 30

'பிரிக்ஸ்' அமைப்பை விரிவாக்கும் முயற்சிகளை, அதன் பிரதான உறுப்பு நாடுகள் கைவிட்டுள்ளதால், இலங்கை அரசாங்கம் பிரிக்ஸில் இணையும் வாய்ப்புகள் தற்காலிகமாக இல்லாது போயுள்ளன.

இது தொடர்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேறத் தெரிவித்ததாவது:-

15



# பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் புதிய நாடாளுமன்றத்தின் முடிவே!

அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவிப்பு

விரிவு :- பக். 02

## தபால் வாக்களிப்பு இன்று

கொழும்பு, ஒக். 30

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தபால் மூலமான வாக்களிப்பு இன்றுமுதல் நடைபெறவுள்ளது.

பொதுத்தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு இம்முறை 7 இலட்சத்து 38 ஆயிரத்து 50 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். முதல் கட்ட வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளது.

'தபால்மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்கள் நிச்சயம் வாக்களிக்கவேண்டும். வாக்களிப்பின் போது அலுவலக அடையாள அட்டைகளை உறுதிப்படுத்தலுக்காக சமர்ப்பிப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்' என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-ம)

## பெற்றோல் தடுப்பாடு?

யாழ்., ஒக். 30

யாழ்ப்பாணத்தில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில், பெற்றோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓரிரு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நீங்கலாக ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தீர்ந்துவிட்டது என்ற அறிவிப்புக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எரிபொருளின் இருப்பு பேணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சிறிய வரிசைகள் உருவாகுவதைக்

15




## காணி சுவீகரிப்பு முயற்சி மண்டைதீவில் முறியடிப்பு

### அநுர அரசாங்கத்திலும் தொடர்கதை

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் – மண்டைதீவில் தனியார் காணியொன்றை அபகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கல் புதிய நாடாளுமன்றில் ஆராய்வு



**கொழும்பு, ஒக்.30**
**பயங்கரவாதத் தடைச்சட்டம் மாற்றப் படவேண்டும் என்ற கருத்தாடல் நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இது தொடர்பில் புதிய நாடாளுமன்றக் கூட் டத்தொடரில் ஆராய்ந்து முடிவெடுக்கப் படும் என்று அமைச்சரவைப் பேச்சாள ரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரி வித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தற்போது நீக்குவது பற்றிக் கலந்துரை யாடல் இடம்பெறும் போது நாடாளுமன் றம் கலைக்கப்பட்டுள்ளது. சட்டத்திருத்தம் ஊடாகவே அதனைச் செய்யவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றவேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. புதிய நாடாளு மன்றகூட்டத்தொடரின்போது இது தொடர்பான கலந்துரையாடல், ஏற்பாடு கள் இடம்பெறும் என்றும் அவர் குறிப் பிட்டார். (ச-44)

## வேலைத்திட்டங்களைத் தொடர மக்கள் ஆணை வழங்குங்கள்

### *மஸ்தான் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக்.30
முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்க ளைத் தொடர்ந்து முன்னெடுக்க மக்கள் ஆணை தரவேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச் சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.
நான் இந்தத் தேர்தலில் தொழிலாளர் கட்சியில் போட்டியிடுகின்றேன். நான் அரசியலுக்கு அப் பால் மக்களுடன் பயணித்தவன். மூவின மக்க ளையும் அரவணைத்து பல்வேறு அபிவிருத்தி களை செய்திருந்தேன். ஜனாதிபதித் தேர்தலின் பின் ஊழலற்ற ஒரு ஆட்சியைக் கொண்டு வர வேண்டும் என மக்கள் விரும்புகின்றார்கள். அத் தகைய விருப்பதற்கு ஏற்ப மக்கள் எமது பணியைத் தொடர எமது கங்காரு சின்னத்தை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட் டார். (ச–18)


யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
**பாராளுமன்ற தேர்தல் 2024**

**தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடல்**

எமது ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் தீப ஒளித்திருநாள், **தீபாவளி** அன்று **(வியாழக்கிழமை, ஐப்பசி 31)** யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் உள்ள ஐந்து இடங்களில் வெளியிடப்பட இருக்கின்றது.

| பகுதி | நேரம் | இடம் |
|---|---|---|
| காரைநகர் | காலை 8 மணி | வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் முன்பாக |
| யாழ்ப்பாணம் | காலை 10 மணி | நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக |
| வடமராட்சி | பிற்பகல் 1 மணி | பொற்பதி புனித இராஜப்பர் ஆலயம் முன்பாக |
| தென்மராட்சி | மாலை 3 மணி | சாவகச்சேரி நகர பேருந்து நிலையம் முன்பாக |
| கிளிநொச்சி | மாலை 6 மணி | கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக |

நீதி மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, நமது சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றோம். மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட எங்கள் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், எதிர்கால தலைமுறைக்கான உறுதிப்பாடுகளை உள்ளடக்குகிறது.

உங்கள் ஆதரவு, எங்களின் முயற்சிகள் வெற்றியடைய வழிகாட்டும் ஒளியாகும்!

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

**மாற்றத்திற்கான நம்பிக்கை...**

சுயேச்சைக் குழு - 2

ஊஞ்சல் சின்னம்





4

**E.S.P நாகரத்தினம் கமலரூபன்**
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)






**களத்தில் கமல்**
**2024 எமக்கான நேரம்**

# பாராளுமன்றத் தேர்தல் 2024
## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்




**மாற்றத்தை நோக்கிய எங்கள் பயணத்தில் .....**

**தமிழ் தேசியமும் பொருளாதார அபிவிருத்தியும் இணைந்து பயணிக்க வேண்டிய காலத்தில் நாங்கள் வாழ்கிறோம்.**

# கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் (கிட்டு)

**பொறியியலாளர், சமூக செயற்பாட்டாளர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## சுயேச்சைக்குழு - 12



**பாசமிகு அரச அலுவலர்களே!**
**அதிபர், ஆசிரியர்களே!**
**உங்கள் அஞ்சல் வாக்குகளை**
**அளியுங்கள் ஆமைச் சின்னத்திற்கே!**

X 2

ஏன்? நீங்கள் ஆமைச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் !

1. ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக 32 ஆண்டுகள் சைவ மக்களிற்கு செய்த சேவைக்காக.
2. வடமாகாண இலங்கை ஆசிரிய சங்கச் செயலாளராக, வடமாகாண ஆ.ஆலோசகர் சங்கச் செயலாளராக சேவை செய்தமைக்காக.
3. அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியராக, சிவசேனைச் சிவத்தொண்டராக இந்து ஸ்வயம் சேவா சங்கப் பணியாளராக சமூக, சமயப் பணிசெய்தமைக்காக
4. கொரோனாக் காலத்தில் ஏழை எளிய மக்களின் பசிப் பிணி போக்கியமைக்காக
5. பத்திரிகைத் துறையில் பிரதேச செய்தியாளராகப் பணிபுரிந்து சமூக நீதி, நியாயத்திற்காக குரல் கொடுத்தமைக்காக.
6. கவிஞனாக, எழுத்தாளனாக, சமயச் சொற்பொழிவாளனாக தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய பணிக்காக.
7. 73 வருடங்களின் பின், சைவத் தமிழ்த் தேசியமீள் கட்டுருவாக்கச் செயற்பாட்டினை ஆரம்பித்தமைக்காக
8. போலித் தமிழ்த் தேசியத்திற்குள் பிரிந்து நிற்கும் சைவத் தமிழ் தேசிய மக்களை ஐக்கியப்படுத்துவதற்காக.



**வெல்லும் சைவத் தமிழ்த் தேசியம்**
**நாளை நமதே!**
**077 960 3001**

# அநீதிகளுக்கான நீதி கிடைப்பதேயில்லை!

## வேட்பாளர் சசிகலா ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.30

ஜனநாயக நாடு இலங்கை என கூறப்படும் போதிலும் அநீதிகளுக்கு நீதி கிடைக்கப்பதென்பது எட்டாக்கனி என்பதே நிதர்சனம்.

- இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,.

என் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி என்னுடைய வீட்டில் பொறிக்கப்பட்டிருந்த என்னுடைய கணவரின் பெயர் மீது மை பூசி அதனை அழித்து அநியாயம் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில் 3 நாள்கள் கடந்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

என்னுடைய கணவர் ரவிராஜ் ஜனநாயக ரீதியில் தேர்தலை எதிர்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டுக்கொண்டிருந்தபோதே தென்னிலங்கையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்றுவரை அதற்கான தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இந்த நாட்டில் அநீதிகளுக்கு முடிவில்லையா? - என்றார். (ச-26)

# முன்னாயத்தச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.30

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி-அலுவலர்கள் ஆகியோருக்கான முன்னாயத்தச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இரு கட்டங்களாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-45 -66)



# நாடாளுமன்றத் தேர்தல் 2024

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி** X



**மாமனிதரின் பாதையில்...**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

**நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2024**
**யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**

தபால் மூல வாக்களிப்பில் கலந்து கொள்ளப்போகும் பெரும் மதிப்புக்குரிய அரச உத்தியோகத்தர்களுக் கான பணிவான கோரிக்கை.

தமிழினத்தின் விடிவுக்காகப் போராடி தன் உயிரை அர்ப்பணித்த மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களின் துணைவியாராகிய நான் சங்கு சின்னத்தில் வேட்பாளராக களமிறங்கியுள்ளேன். .

இடப்பெயர்வுகளின் போது வந்தாரை வரவேற்று வாழவைத்த தென்மராட்சி மண், மாமனிதர் ரவிராஜ் அவர்களுக்கு பின் 18 ஆண்டுகளாக சிறந்தவொரு தலைமைத்துவம் இன்றி எம்மினம் நிற்கிறது.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு ரவிராஜ் அவர்களின் துணைவியார் சசிகலா ஆகிய எனக்கு நீங்கள் தந்த மகத்தான வாக்குப்பலத்தை உறுதியாக நம்பி இம்முறை பொதுத் தேர்தலில் சங்கு சின்னத்தில் களமிறங்கியுள்ளேன்.

எமக்கு நடந்த அநீதிக்கும் அடக்கு முறைகளுக்கும் முகம் கொடுத்து கணவரையும் பிள்ளைகளையும் இழந்து கண்ணீரோடு போராட்டம் நடத்தும் தாய்க் குலத்தின் உள்ளக்குமுறல்களை எதிரொலிக்கவும் உங்களில் ஒருத்தியாகிய என்னை ஆதரித்து பலம் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

தேசத்திற்காக அர்ப்பணிக்கும் உங்களில் ஒருவரான எனக்கும் உங்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றைத் தந்து வெற்றிப் பாதைக்கு வலுச்சேர்க்குமாறு இரு கரம் கூப்பிவேண்டி நிற்கின்றேன்.

சந்தர்ப்பவாத தலைமைகளை நிராகரிப்போம்.
சத்தியத்துக்காக உயிர் தந்த தியாகிகளுக்கு
அங்கீகாரம் வழங்குவோம்.

சசிகலா இரவிராஜ்

- சமஷ்டி...
- பெண்ணுரிமை.
- பொருளாதார அபிவிருத்தி...



**சசிகலா ரவிராஜ்**
BSc,Dip.in.Edu

X 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தின நிகழ்வும் மூத்தோர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஒக்.30
சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் சிறுவர்தின நிகழ்வும், மூத்தோர் கௌரவிப்பும் சிவன் சிறுவர் கழகத் தலைவர் மாதுளா மதியழகன் தலைமையில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பி.ப 2.45 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் கலங்கரை இதழ்- 5 வெளியீடும் இடம்பெற்றது. (எ-45-66)






# மதிப்பளிப்பும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக்.30
தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் ஊக்குவிப்பு ஒன்றியம் மற்றும் தென்மராட்சி விளையாட்டு அபிவிருத்தி ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு, விளையாட்டு வீரர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் யாழ்.சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் ஆசிரியர்கள் 'சேவையின் மகுடம்' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். விளையாட்டு வீரர்களுக்கு பணப் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சமூக செயற்பாட்டாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணியும், சனநாயக தமிழரசுக் கூட்டணி முதன்மை வேட்பாளருமான கே.வி. தவராசா, வேட்பாளர் ஸ்ரீகாந்தரூபன் விமலேஸ்வரி, வேட்பாளர் கருணாகரன் குணாளன், முன்னாள் போராளி வைத்திலிங்கம் பால சுரேஷ், சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-25-27)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.30
சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த கேதார கௌரி உற்சவ காலச் சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மு.ப 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'கேதார கௌரி விரத மகிமை' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (ரி)

★★★★★

யாழ்ப்பாணம், ஒக்.30
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 29 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'மாணிக்கவாசகரும் அருட்பத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)



# ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.30
தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொதுநூலகம் நடத்திய பிரதேச ஓவியர் சி.சந்திரசுபநேமியின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி கடந்த ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெற்றது.

கண்காட்சியில் ஈழத் தமிழ்மக்களின் வாழ்வியல், கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் தொன்மையான வரலாற்று அம்சங்களைப் பிரதிபலிக்கும் பல்வேறு ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டதோடு, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் சித்திரத் தேரும், தீயிட்டு அழிக்கப்பட்ட பின்னர் எஞ்சிய நிலையில் காணப்பட்ட சிதிலங்களும் ஓவியரால் வரையப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (எ-45-66)

# கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியாச்சகர் லூட்சன் சூரிய பண்டாரா தலைமையில் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கலந்துரையாடலில் போக்குவரத்து பொலிஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக் கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆயாடப்பட்டது. கலந்துரையாடலில் உதவிப் பொலிஸ் அத்தியாட்சகர் கில்ட மல்கொட மற்றும் யாழ். பிரதான பொலிஸ் நிலையப் பரிசோதகர் பலியகேன உட்பட போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ரி-27)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** காலையில் சற்று சோர்வாக இருக்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். திடீர் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். முக்கிய முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும் என்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களு டைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்:** தந்தை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்று வீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்று பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அரச உத்தியோகத்தர்களே!



**உங்களோடு என்றும் நான்**

உங்களது பெறுமதி மிக்க வாக்குகளை திசைகாட்டிக்கும் எனது இலக்கமாகிய 9 க்கும் இட்டு அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்

**Dr.S.சிறீபவானந்தராஜா**
(MBBS, M.Sc Medical admin)
முன்னாள் பிரதிப் பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

X 9

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**

2



**இம்மானுவல் ஆனல்ட்**
B.A (Hons) Phil.Spl
*MSS Limra International (USA)*
*AMTC Limra International (USA)*

- முன்னாள் முதல்வர், யாழ் மாநகர சபை.
- முன்னாள் உறுப்பினர், வடக்கு மாகாண சபை.
- மொழிப்பற்றாளன்.

X

**"தமிழரின் தாகம் தமிழ்த் தேசியம்"**
தமிழ் தேசியத்திற்காய் என்றும் தடம்மாறாத பயணம் ...

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

**அன்புக்குரிய மக்களே!**
'இரு தேசங்கள் ஒரு நாடு' என்ற இலக்கினையடைய, தமிழ்த் தேசக் கொள்கை வழி நின்று நேர்மையாக செயற்பட்டு வருகின்றோம். இலஞ்சம், ஊழலற்ற - செயல் திறன்வாய்ந்த - சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள இயக்கமாகவே செயற்படுகின்றோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சலுகைகளுக்கு விலைபோகாத, நேர்மையான அரசியல் பயணத்தையே முன்னெடுத்துவருகின்றோம். எமது அணியின் கொள்கை நிலைப்பாட்டைப் பலப்படுத்த, தமிழ் இனம் தனது வரலாற்றுக் கடமையை ஆற்றும்வகையில், உங்கள் தார்மீக ஆதரவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் **'சைக்கிள்'** சின்னத்துக்கு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

**தமிழ்த் தேசமாய் பேரெழுச்சி கொள்வோம்!**



**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.
2

**கனகரட்ணம் சுகாஷ்**
சட்டத்தரணி,
ஊடகப் பேச்சாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
1


**செல்வராசா கஜேந்திரன்**
பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.
9

**'இரு தேசங்கள் ஒரு நாடு'**
**இலக்கினை அடைய**
**ஒற்றைத் தலைமையில்**
**ஓரணியாவோம்!**

X

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# நாடாளுமன்றத் தேர்தல் -2024





- 43 வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச் சட்டம் ஆகியவற்றின் மூலம் கைது செய்யப்பட்ட போராளிகளுக்காக 1000க்கும் மேற்பட்ட வழங்குகளை சிங்களத்தின் கோட்டைக் குள் நின்று அச்சமின்றி வெற்றிகரமாக எதிர் கொண்டவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா
- பொங்கு தமிழில் உரையாற்றியதற்காக வழக்குத் தொடரப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரையும் விடுவிக்க சட்ட நடவடிக்கை எடுத்தார்.
- புலிகளை ஆதரித்துப் பேசினார் என்ற குற்றச் சாட்டில் கைதான விஜயகலா மகேஸ்வரனை விடுவிக்க முன் நின்றார்.
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேலமாலிதன், சிவஞானம் சிறிதரனின் செயலாளர் பொன்னம்பலம் லட்சுமி காந்தன் ஆகியோரை விடுவிக்க சட்ட நடவடிக்கை எடுத்தார்.

**தமிழர்களின் நீதிக்காக 43 வருடங்களாக போராடுபவருக்கே உங்கள் வாக்கு**

**K.V.தவராசா**
சுயேச்சைக்குழு -14

X 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொழிலதிபருக்கு பயணத்தடை

கொழும்பு, ஒக்.30
ஊழியர் சேமலாப நிதியை செலுத்தாத தொழிலதிபருக்கு எதிராக நீதிமன்றம் வெளிநாட்டு பயணத்தடை விதித்துள்ளது.
ஜப்பானிய நிறுவனமொன்றுடன் இலங்கைக்கான கட்டட ஒப்பந்தகாரராக நியமிக்கப்பட்ட சிலோன் பிரைவேட் லிமிட்டெட் உரிமையாளரான பெரேரா என்பவருக்கே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.
2017 ஆம் ஆண்டு ஜப்பானிய உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப்பணிகள் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டது.
இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்ட ஜப்பானிய நிறுவனம் ஊழியர் சேமலாப நிதி 9.8 மில்லியன் ரூபாவை சிலோன் பிரைவேட் லிமிட்டெட்டுக்கு செலுத்தியிருந்தது. எனினும் சிலோன் பிரைவேட் லிமிட்டெட் ஊழியர் சேமலாப நிதியை ஊழியர்களுக்கு வழங்கவில்லை. இதனையடுத்து ஊழியர்கள் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.
தொழில் திணைக்களத்தின் முறைப்பாட்டிற்கிணங்க கொழும்பு கிழக்கு மஜிஸ்திரேட் சந்தேக நபருக்கு எதிரான பயணத்தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். (ச-25, 6)

## 45 வீத பொலிஸாருக்கு தொற்றா நோய்கள்!

கொழும்பு, ஒக்.30
இலங்கையில் சேவையில் உள்ள 85 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களில் 45 வீதமானவர்கள் தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று 2021ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.
35 வீதமானோருக்கு இன்னும் தங்களுக்கு நோய் இருப்பது தெரியாது என்பதும் அதில் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்த ஆய்வின் படி சேவையில் இருக்கும்போது மாதமொன்றுக்கு சுமார் 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பல்வேறு நோய்களால் உயிரிழக்கின்றனர். வருடத்துக்கு 23 பேர் தற்கொலைக்குத் தூண்டப்படுகின்றனர்.
அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது அவசியம் எனவும், மருத்துவமனையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு விடுதியாவது ஒதுக்குவது தொடர்பில் சுகாதாரத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-45)

## இந்தியாவால் இலங்கைக்கு சூரிய மின்கலம் அன்பளிப்பு


கொழும்பு, ஒக்.30
17 மில்லியன் டொலர் பெறுமதியான 5000 சூரிய மின்கலங்களை இலங்கையின் வழிபாட்டுத்தலங்களுக்கு இந்தியா வழங்கவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. முதல் கட்டமாக ஹோகந்த விகாரை, ஆஞ்சநேயர் ஆலயம், புனித அந்தோனியார் தேவாலயம், முத்துவால் பள்ளிவாசல் என்பவற்றுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன. இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களுக்கும் இந்த மின்கலங்கள் வழங்கப்படவுள்ளன. இவை 25 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. ஆண்டுக்கு 37 மில்லியன் யூனிற் மின்சாரத்தை இந்த சூரிய மின்கலத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25,6)




தீபாவளிக்கு யாழ்ப்பாண ரவுனுக்குள்ள உடுப்புக்கடையளில கடும் யாவாரம். நெரிபட்டுத்தான் ரவுனுக்குள்ள போய்வரவேண்டிக்கிடக்குது. இந்த யாவார அமளிக்குள்ள பிச்சையெடுக்கிற ஆக்களும் கூடிப்போட்டினம். வருசம், தீபாவளி எண்டால் ரவுனுக்குள்ள பிச்சை எடுக்கிற ஆக்கள் கூடுதலா இருக்கிறது வழமைதான். அதுவும் சிங்கள ஏரியாக்களில இருந்து ரூரிஸ்ட் வாற மாதிரி, இப்ப பிச்சைக்காரரும் சீசனுக்கு சீசன் படையெடுக்கினம். ஒவ்வொரு பிச்சைக்காரரும் ஒவ்வொரு ரகம். ஒராள் யானைக்கால் எண்டும், இன்னொரு ஆள் இடுப்பில குத்தின சேலைன் பைப்போட கையில ஒரு மட்டையோட நிக்கும், இன்னொரு ஆள் ரண்டு காலும் இல்லாமல் கையில சொக்ஸைப் போட்டுக்கொண்டு ஊர்ந்துகொண்டு திரியும், இன்னும் சிலர் இடுப்பில சின்னப்பிள்ளையள் அழுதுகொண்டிருக்க அந்தப் பிள்ளையளைக் காட்டியும் பிச்சை எடுப்பினம்.

மற்ற எல்லாத்துக்கும் கரையாத ஆக்களும் சின்னப்பிள்ளையள் எண்டவுன கரைஞ்சுபோய், கண்ணைமூடிக்கொண்டு காசைப் போடுவினம். இது தெரிஞ்சுதான் அவையும் பிள்ளையளை அழவைச்சு, காசு பாக்கினம். அதைவிட அவையள் தூக்கி வைச்சிருக்கிற பிள்ளையள், அவையின்ர சொந்தப்பிள்ளையளாக் கூட இருக்காது. ஊரில கஷ்டப்பட்ட வேற ஆக்களிட்ட , கடனுக்கு பிள்ளையளை வாங்கிக்கொண்டந்து பிச்சை எடுக்கிறவை தான் கூட. அவையின்ர முதலீடு அந்தப் பிள்ளையளும், அதுகளின்ர அழுகையும், கஷ்டமும் தான். சீசன் முடிய பிள்ளையையும், பிச்சை எடுத்துச் சேர்ந்த காசில ஒரு பங்கும் அந்தப் பிள்ளையின்ர குடும்பத்துக்கு குடுப்பினம். பிறகு அடுத்த சீசனுக்கு அந்தப் பிள்ளையை வாங்கிக் கொண்டு பிச்சைக்கு வெளிக்கிடுவினம். இப்பிடித்தான் அவையளின்ர பிழைப்பு போகுது.

இந்த மாரிகாலத்தில யாழ்ப்பாண ரவுண் என்ன நிலைமையில இருக்குமெண்டது உங்களுக்குத் தெரியும். வெள்ளம் தேங்கி, சேறு சுரி நிரம்பி, இரவு பகல் எண்டில்லாமல் நுளம்பு, இலையான்கள் பெருகி , வடிகால்கள் வழிஞ்சோடி அந்தக் கழிவுகள் எல்லா இடமும் பரவி நகரம் இப்ப நரகம் மாதிரித் தான் கிடக்குது. சும்மா கால் வைக்கவே கூசும். அப்பிடிப்பட்ட நிலையில, உந்தப் பிச்சை எடுக்கிற ஆக்கள் தாங்கள் தூக்கிவைச்சிருக்கிற குழந்தையளை இரவில ஏதும் கடைக்கட்டட ஓரத்தில படுக்க வைச்சால், கொஞ்சமாவது அந்தப் பிள்ளையள் நிம்மதியாப் படுப்பினம். ஆனால் அந்த இரவிலையும் காசு பிடுங்கவேணும் எண்டதுக்காக அந்தப் பிள்ளையளை இந்தக் குளிருக்குள்ளையும் றோட்டில , கார்போர்ட் மட்டையைப் போட்டிட்டு படுக்க வைக்கினம். இரவில பஸ்ஸுக்கு போறவை குழந்தையள் படுத்திருக்கிற பரிதாபத்தைப் பார்த்திட்டு காசும் போடத்தான் இப்பிடிச் செய்யினம். முதல்ல இப்பிடி நாங்கள் பரிதாபம் பாக்காமல் விட்டால் தான் அந்தக் குழந்தையளுக்கு விமோசனம் கிடைக்கும் போல.



-பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## மீண்டும் தொடங்கும் நெருக்கடிகள்

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து சில வாரங்களே ஆகியிருக்கும் நிலையில் நெருக்கடிகளைச் சந்திக்க ஆரம்பித்திருக்கின்றது. தேர்தல் காலத்திலும், அதற்கு முன்னரும் மக்களுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதிலும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சிறிது திணறவே செய்கின்றது என்பதை நாட்டின் களநிலவரம் வெளிப்படுத்துகின்றது.

ஊழலற்ற நாட்டை உருவாக்குவோம் என்றும் கடந்த காலங்களில் ஊழல்களில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன்பாக நிறுத்துவோம் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கடந்தகாலங்களில் தொடர்ச்சியாக மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளிலும் அந்தக் கட்சி இதையே முதன்மைப்படுத்தித் தனது பிரசாரங்களை முன்னெடுத்திருந்திருந்தது. நாட்டு மக்களின் ஆதரவு அலை அநுரகுமார திஸாநாயக்க பக்கம் திரும்புவதற்கும் இதுவே பிரதான காரணமாகவிருந்தது. ஆட்சிக்கு வந்ததும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தடாலடியாகச் செயற்படும் என எதிர்பார்த்திருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கின்றார்கள் என்பதே உண்மை. ஆட்சிக்கு வந்ததும் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஆமை வேகத்திலேயே இருக்கின்றன. ஊழல்வாதிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறியிருந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது கடந்த கால ஆட்சியாளர்களின் பாதையிலேயே மெல்லத் திரும்புகின்றதா? என்ற சந்தேகம் எழ ஆரம்பித்திருக்கின்றது. ஆனால் நாடாளுமன்றப் பலத்தைப் பெற்ற பின்னரே காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்ற தேசிய மக்கள் சக்தியின் வாதத்தையும் ஒதுக்கிவிட முடியாது.

இது ஒருபுறமிருக்க நாட்டில் தட்டுப்பாடு என்ற சொல் மீண்டும் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது. நாட்டில் 'வரிசைகள்' மீண்டும் ஆரம்பித்திருக்கின்றன. தேங்காய், அரிசி என மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களின் தட்டுப்பாடு அநுரகுமார அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாக நிச்சயம் மாறும். சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் தாக்கம் ஏற்படும்போது அதனால் ஏற்படும் அதிருப்தி அலை தேசிய மக்கள் சக்தி கட்டியெழுப்பியிருக்கும் விம்பத்தில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். அதேநேரம், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பலகோடி ரூபாவை ஒரே இரவில் அச்சிட்டுள்ளது என்ற செய்தியும் வெளியாகியிருக்கின்றது. அது உண்மையானால் இன்னும் ஓரிரு மாதங்களில் அதன்விளைவுகளை நாட்டுமக்கள் அனுபவிக்க நேரிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த நெருக்கடிகளை அநுரகுமார திஸாநாயக்க எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான்பார்க்க வேண்டும். இந்த நிலைமைகள் தொடருமானால் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் நாட்டில் நடப்பதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை. மக்கள் எதிர்பார்ப்பதை அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் செய்யத் தவறினால் வெகு விரைவில் மீண்டும் ஓர் அரசியல் நெருக்கடி ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.




## உள்ளாட்சித் தேர்தல் முறைமை புதிய நாடாளுமன்றில் முடிவு

### விஜித ஹேரத் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.30**
**உள்ளாட்சிசபைத் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. தேர்தலுக்காக புதிதாக வேட்பு மனுக்களை கோருவதா, இல்லையா என்பது பற்றி அடுத்த நாடாளுமன்றத்தில் முடிவெடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றபோதே எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். உள்ளாட்சி சபைத் தேர்தல் முறைமையை மாற்றுவது பற்றி இன்னும் கலந்துரையாடல் இடம்பெறவில்லை. எனினும், உள்ளாட்சிசபைத் தேர்தலுக்காக வேட்பு மனுக்களை கையளித்தவர்களில் சிலர் வெளிநாடு சென்றுள்ளனர். மேலும் சிலர் கட்சி மாறியுள்ளனர். சிலர் உயிரிழந்துவிட்டனர். இப்படியான பிரச்சினைகள் உள்ளன. எனவே புதிதாக வேட்பு மனுக்களை ஏற்பதாக இருந்தால் சட்ட திருத்தம் அவசியம். புதிய நாடாளுமன்றத்திலேயே இது பற்றித் தீர்மானிக்கப்படும் - என்றார். (ச-44)

## ரயில் நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக்.30
ரயில் நிலைய அதிபர்கள் அடுத்த 72 மணிநேரத்துக்கு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர். நடைமுறைகளை மீறி ரயில் நிலைய அதிபர்களை நியமித்தமைக்கு எதிராகவே இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## வடமராட்சியில் வா. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.30
எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் வடமராட்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. தபால் உழியர்கள் வீடு வீடாகச் சென்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்து வருகின்றனர். (ரி-100)

## பொதுத்தேர்தல் 939 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக்.30
பொதுத் தேர்தல்கள் தொடர்பில் இதுவரை 939 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச)

## வடக்கு மக்களின் நம்பிக்கை சஜித்தே

### டலஸ் தெரிவிப்பு

வடக்கு மக்கள் சஜித்மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் சான்றாகும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சூழ்நிலையில்தான் யாழ். மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸ முதலிடம் பிடித்தார். இந்த முடிவின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்சினையை சந்தர்ப்பவாத அரசியலுக்கு சஜித் பயன்படுத்தமாட்டார் என்பது மக்களுக்குத் தெரியும். என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

### நாளை

31.10.2024

வியாழக்கிழமை - ஐப்பசி - 14

சுபநேரம் : 07.33 - 09.03

ராகுகாலம் : 01.33 -03.03

### நாளொரு நல்வார்த்தை

**ஆபத்துகளை எதிர்கொள்ளாமல், உயர்ந்த விடயங்களை ஒருபோதும் அடைய முடியாது.**

-நிக்கோலோ -மச்சியாவெல்லி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கனவு யாழ் நோக்கிய பயணம்...



| 2015-2019 | 2020-2024 |
|---|---|
| 65,560+ மொத்த திட்டங்கள் | 20,268+ மொத்த திட்டங்கள் |
| ரூ 1,984,308,000 மொத்த நிதி ஒதுக்கீடு | ரூ 4,533,308,077 மொத்த நிதி ஒதுக்கீடு |
| 455,170+ மொத்த பயனாளர்கள் | 444,416+ மொத்த பயனாளர்கள் |




அய்னா சிறிசுதர்சன் 2
முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்

3 இராசையா இராஜசேகரம்
ஓய்வுநிலை அதிபர் (SLPS 1), சமாதான நீதவான்

குணசேகரம் பிறேம்காந் 4
சமாதான நீதவான், மனித உரிமை செயற்பாட்டாளர்

5 தில்லைநாதர் தங்கவேலு
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் – தென்மராட்சி

பாலகிருஸ்ணன் முகுந்தன் 6
யாழ் மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்

7 றொபின்சன் அனுஜன்
விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்

வசந்தன் சுமதி 8
தலைவி – சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்கம் மட்டுவில்

9 செந்திவேல் தமிழினியன்
முன்னாள் நகரசபை உறுப்பினர் – வல்வெட்டித்துறை

என் கனவு யாழ் நோக்கிய பயணம்...

- www.enkanavuyarl.lk
- info@enkanavuyarl.lk
- facebook.com/enkanavuyarl
- facebook.com/angajan1
- instagram.com/enkanavuyarl

மேலதிக விபரங்களுக்கு

என் கனவு யாழ் நோக்கிய பயணம்...



# அங்கஜன்

## இராமநாதன்

X 1

ஜனநாயக தேசியக் கூட்டணி
ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
Democratic National Alliance

## அங்கஜன் இராமநாதன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

இல 80 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
+94 77 382 7568

ஈமெயில் – angajan@gmail.com
வெப்சைட் – https://enkanavuyarl.lk/



### கல்வித் தகைமைகள்
B.Eng (Hons), MBA (International)

### அரசியல் அனுபவங்கள்
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்
மாகாணசபை உறுப்பினர்
பிரதி விவசாய அமைச்சர்
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவர்
யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர்
பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர்

### பதவிகள்
பாராளுமன்ற உறுப்பினர்
(புரட்டாதி 2015 – புரட்டாதி 2024) – 3303 நாட்கள்


விவசாய பிரதி அமைச்சர்
(ஆடி – மார்கழி 2018) – 140 நாட்கள்

பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளர்
(ஆவணி 2020 – புரட்டாதி 2024) – 1496 நாட்கள்

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவர்
(ஆவணி 2020 – தை 2023) – 1248 நாட்கள்

கடந்த தேர்தலில் மக்கள் அபிவிருத்திக்கான ஆணையை எமக்கு வழங்கியிருந்தனர். ஆணைப்படி, நாங்கள் சொல்வீரர்களாக இல்லாமல் செயல் வீரர்களாக கடந்த காலத்திலே மக்களுக்கு, அரசாங்க நிதியிலும் தனிப்பட்ட நிதியிலும் வாழ்வாதாரம், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய சமூக மேம்பாடுகள் சார்ந்து பல்வேறு வேலைத்திட்டங்களை செய்திருக்கின்றோம். எம் தமிழ் மக்களை நன்கு புரிந்து கொண்டவர்கள் நாம். அவர்களின் விருப்புக்கிணங்கவே தனித்தமிழ் கட்சியாக இம்முறை களமிறங்கியிருக்கின்றோம். 'என் கனவு யாழ்' பயணம் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்திருக்கின்றது. அதுவோர் நீண்ட பயணம். அதனை தொடர்வதற்கான வாய்ப்பு இந்த தேர்தல். நாங்கள் சொன்னவற்றில் செய்தவை உங்களுக்கு தெரியும். இந்தப் பயணத்தை தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சாத்தியத்தை உங்கள் வாக்குகள் மூலம் எமக்கு வழங்குங்கள். எம் கனவுகளை நோக்கி நாம் சேர்ந்து பயணிப்போம்.

## MY DREAM ACADEMY
மீண்டும் கல்வியில் முதலிடம்



என் கனவு யாழ் – மீண்டும் கல்விக்கு முதலிடம் என்ற இலக்கின் ஒரு மைல் கல்லாக **MY DREAM ACADEMY** ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்பட்டுவருகிறது.



"தகவல் தொழில்நுட்ப கற்றலின் ஆரம்ப நிலையை இலவசமாக மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கிறது."

ஒவ்வொரு மாணவரும் **தலா 25 லட்சம்** பெறுமதியான கற்கையை முற்றிலும் இலவசமாக பெறுகின்றனர்.

இக்கற்கைநெறியானது, Code.org, Thunkable, Microbit, Pictoblo, Glitch உள்ளிட்ட தளங்களோடு இணைந்து உருவாக்கப்பட்ட தரம்வாய்ந்த 300க்கு மேற்பட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு 8 பாடத்திட்டங்களையும் நிறைவு செய்யும்போது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை பெற்றுக்கொள்வார்கள்.

"தேர்ச்சியடையும் மாணவர்கள் சர்வதேச மட்ட தொழில்வாய்ப்புகளை பெற தகுதியடைகிறார்கள்".

இந்த வாய்ப்பு மிகவும் பெறுமதியானது. உங்கள் கற்றலுக்கான முழுச் செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதை சரியாக பயன்படுத்தி, திறம்படக்கற்று தேர்ச்சி பெறுங்கள். அதன் பலன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்குமே. இதை மனதில் நிறுத்தி, இக்கற்கைநெறியை மகிழ்ச்சியுடன் தொடங்குங்கள். தொழில்நுட்ப உலகத்துக்குள் வரவேற்கிறேன்.



## GOAL OF MY DREAM ACADEMY
"எமது மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகரித்து முதலிடத்துக்கு அவர்களை கொண்டுவருதல்."

# அங்கஜனின் செயல் அற

X 1 என் கனவு யாழ் இருப்பியல்

X 1 என் கனவு யாழ் இருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பயணம்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு 3461 வாக்குகளை பெற்றேன்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2013** — மாகாணசபை தேர்தலில் 10,034 வாக்குகள் பெற்று வடக்கு மாகாண சபைக்கு தெரிவானேன்

**2015** — பாராளுமன்றத் தேர்தலில் 17,300 வாக்குகள் பெற்று தேசியப்பட்டியலூடாக தெரிவானேன்

**2015** — யாழ், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக நியமிக்கப்பட்டேன்

**2015** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்டேன்

**2018** — பிரதி விவசாய அமைச்சராக பொறுப்பேற்றேன். 140 நாட்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றினேன்



**2018** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2018** — யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் விசேட திட்டங்களின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2019** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2020** — பாராளுமன்றத் தேர்தலில் 36,365 வாக்குகள் பெற்று மாவட்டத்தின் அதிகூடிய விருப்பு வாக்கு பெற்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு தெரிவானேன்

**2020** — பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளராக நியமிக்கப்பட்டேன். இளவயதில் அப்பதவியை பெற்றுக்கொண்ட உறுப்பினராக விளங்கினேன்

**2020** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2024** — ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதித்தலைவராக நியமிக்கப்பட்டேன்.

## 01.அடிப்படை வசதிநலன்

நிறைவான கிராமம்
**271,195**
பயனாளிகள்
793 திட்டங்கள்
ரூ 864,787,864 ஒதுக்கீடு

மலசல கூடம்
**914**
பயனாளிகள்
ரூ 65,500,000 ஒதுக்கீடு

மூளாய் கிராமத்துக்கு
**4 மில்லியன்**
ரூபாய் பெறுமதியில் நனோ தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வீட்டுத்திட்டம்
**3484**
வீடுகள்
ரூ 2,733,600,000 ஒதுக்கீடு

## 2. உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு நலன்

வீதி புனரமைப்பு
180 திட்டங்கள்
**321+ KM**

விளையாட்டு கழகங்களுக்கான விசேட உதவித்திட்டம் 2023
பயனாளிகள் **10,000**

விளையாட்டு மைதானம்
**30** திட்டங்கள்
ரூ 88,500,000 ஒதுக்கீடு

ஆலய புனரமைப்பு
**60** திட்டங்கள்
ரூ 6,000,000 ஒதுக்கீடு

## 03.விவசாயம் மற்றும் உற்பத்தி

வர்த்தக பயிர் விதைகள்
**1110 பயனாளிகள்**
ரூ 3,979,686 ஒதுக்கீடு

**2 விவசாய களஞ்சியம்**
ரூ 13,474,000 ஒதுக்கீடு

16 உற்பத்தி கிராமங்கள்
**1,292 பயனாளிகள்**
ரூ 100,000,000 ஒதுக்கீடு

விவசாய குளங்கள் புனரமைப்பு
**10 திட்டங்கள்**
ரூ 38,700,000 ஒதுக்கீடு

வீட்டுத்தோட்ட வாழ்வாதாரம்
(நாற்றுமேடை, வீட்டுத்தோட்டம், சேதனப்பசளை)
**1185 பயனாளிகள்**

Spray pump
**85 பயனாளிகள்**
ரூ 2,125,000 ஒதுக்கீடு



## 04.போருக்கு பின்னான மீள் குடியேற்றம் மற்றும் இழப்பீடுகள்

யுத்தத்தால் ஏற்பட்ட சொத்திழப்பு கொடுப்பனவு
**253 பயனாளிகள்**
ரூ 2,488,752 ஒதுக்கீடு

இலவச மின்சார இணைப்பு
**2005 வீடுகள்**
ரூ 45,000,000 ஒதுக்கீடு

நீண்டகாலமாக எமது மக்கள் எதிர்கொண்டிருந்த சட்ட ஆவணங்கள், பதிவுகள், இழப்பீடுகள் தொடர்பாக தீர்வுகளை பெற்றுக் கொள்ள கூடியவகையில் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையை நீதி அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்தமை

வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்திற்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ் மாவட்டத்தில் நடாத்தியமை.

## 05.பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி
**1500**
பயனாளிகள்

கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு
**424**
பயனாளிகள்

GLOCAL Fair
நடமாடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

வடமாகாண தொழில்துறை நிலையத்தின் சாயம் நிலையத்தை மேம்படுத்தல்
**150**
பயனாளிகள்

பற்றிக் பயிற்சி நிலையம்
**500**
பயனாளிகள்
ரூ 93,750,000 ஒதுக்கீடு

வாழ்வாதார திட்டங்கள்
**7289**
பயனாளிகள்

## 06.நிதி மற்றும் ஏனைய வளர்ச்சித்திட்டங்கள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்
**35000**
பயனாளிகள்
**347**
திட்டங்கள்
2018-2019 ரூ 20,000,000 ஒதுக்கீடு
2021 ரூ 10,000,000 ஒதுக்கீடு

150 மில்லியன் விசேட நிதி 2024
**35000**
பயனாளிகள்

3 மில்லியன் வேலைத்திட்டம் 2022
**80000**
பயனாளிகள்
ரூ 272,704,000 ஒதுக்கீடு

# ...றிக்கை (2020 - 2024)

...ப்பியல்
வையத் தலைமை கொள்
X 1
எங்களது யாழ்
இருப்பியல்
வையத் தலைமை கொள்
X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.10.2024
புதன்கிழமை

அறிவைவிட ஆர்வமே அதிக செயல்களைச் செய்ய வல்லது.
- வில்லியம் ஹாஸ்லிட்

# புதன் பொய்



# மக்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களித்தால் வெற்றி நிச்சயம்!

## நாகரத்தினம் கமலரூபன்

வடக்கில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் வணிகப்பரப்பிலும், அறப்பணிகளிலும் அறியப்பட்ட ஒரு குடும்பப் பாரம்பரியத்தில் இருந்து இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக்குழுவாக ஊஞ்சல் சின்னத்தில் களம் காண்கிறார் நாகரத்தினம் கமலரூபன். சிறப்புக்கலைமாணியான இவர் சட்டத்தரணியும் கூட. அவருடனான சிறப்பு நேர்காணல் இது.

**நேர்கண்டவர்: யாழின்பன்**

**கே: வர்த்தகப் பாரம்பரியம் கொண்ட நீங்கள், திடீரென அரசியலுக்குள், அதுவும் எடுத்த எடுப்பிலேயே நாடாளுமன்றத் தேர்தலில் நுழைந்தமை ஏன்?**

**ப:** நான் தேர்தல் அரசியலுக்குத்தான் புதிது. ஆனால் அரசியலுக்கு புதிதல்ல. நான் கொழும்பு இந்துக்கல்லூரியில் உயர்தரத்திலும், கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்றிருந்தேன். பின்னர் சட்டக் கற்கையிலும் அரசியல் பற்றி பல விடயங்களை அறிந்திருக்கிறேன். அந்தவகையில் நான் அரசியல் பற்றிய கற்கையிலும், நாட்டு அரசியலில் என்ன நடக்கிறது என்ற அவதானிப்பிலும் கடந்த 10 வருடங்களாக ஈடுபட்டே வருகின்றேன். 2023 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, யாழ்ப்பாணம் மாநகரசபையில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தேன். துரதிர்ஷ்டவசமாக அந்தத் தேர்தல் நடக்கவில்லை.
திட்டமிட்டபடி உள்ளாட்சித் தேர்தல் 2023 இல் நடந்திருந்தால் இப்படியொரு கேள்வி வந்திருக்காது. நிச்சயமாக அந்தத் தேர்தலில் வென்று, மக்களுக்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி என்னுடைய அரசியல் ஆளுமையையும் மக்கள் நன்கறிந்திருப்பார்கள். எல்லோருக்கும் நன்குபரிச்சயமானவனாக நானும் இந்த நாடாளுமன்றத்தேர்தலை எதிர்கொண்டிருப்பேன்.

**கே: உங்கள் அரசியல் அறிமுகத்தை ஒரு கட்சியூடாகச் செய்யாமல் ஏன் சுயேச்சைக்குழுவாகக் களம் இறங்கினீர்கள்?**

**ப:** என்னைப் பல கட்சிகள் அரசியலுக்கு அழைத்தார்கள். ஆனால் நான் தான் அவற்றை மறுத்திருந்தேன். ஏனென்றால் இப்போது மக்களுக்கு கட்சிகளில் நம்பிக்கையில்லை. கடந்த காலங்களில் அந்தக் கட்சிகளும், அவற்றின் தலைமைகளும் ஆளுமையற்றுச் செயற்பட்டதால் மக்களைப் போலவே எனக்கும் அவற்றில் நம்பிக்கையில்லை. அதனால் நான் சுயமாக, சுயேச்சைக்குழுவில் களமிறங்கி என்னை மக்களுக்கு நிரூபித்த பின்னர் கட்சி அரசியலைப் பற்றி ஆலோசிக்கலாம்.

**கே: ஆனால் சிக்கல் என்னவெனில் உங்கள் சுயேச்சைக்குழுவில் நீங்கள் உள்ளிட்ட எவருமே மக்கள் மத்தியில் பரிச்சயமானவர்கள் அல்லர். இந்த நிலையில் உங்கள் குழுவுக்கா வெற்றிவாய்ப்பு சாத்தியமா?**

**ப:** எமது சுயேச்சைக்குழுவின் மகுட வாசகம் 'மாற்றத்துக்கான நம்பிக்கை' என்பதுதான். இப்போது மக்கள் பரிச்சயமான, பிரபலமான அரசியல்வாதிகளை விடுத்து, தமக்கு நல்லது செய்யக்கூடிய புதியவர்களையே தேடுகின்றார்கள். அந்தவகையில் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய கொள்கையோடும், செயலாற்றலோடும் நாம் இருப்பதால் நிச்சயமாக ஒரு ஆசனத்தையேனும் கைப்பற்றுவோம். நாம் மட்டுமல்ல, இங்கேயுள்ள பிரதான கட்சிகள் கூட இம்முறை தமக்கு ஒரு ஆசனமே கிடைக்கும் என நம்புகின்றன. அந்த ஒரு ஆசனத்துக்காகவே யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் 9 வேட்பாளர்களை இறக்கியுள்ளன என்பதே யதார்த்தம். நாங்கள் மக்களிடம் சரியான வகையில் சென்றடைந்தால், சிலவேளைகளில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கவும் வாய்ப்புண்டு. அப்படி மேலதிகமாக ஒரு ஆசனம் கிடைத்தால், அதனை ஒரு ஆளுமையுள்ள பெண்ணுக்கு முதலில் வழங்குவதோடு, பின்னர் 11 தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்களும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சுழற்சி முறையில் வகிக்கும் வகையில் சில ஏற்பாடுகளை நான் செய்வேன். அத்தோடு தாயகத்தையும், புலம்பெயர்நாடுகளையும் இணைக்கும் வகையில் ஒரு கட்டமைப்பை உருவாக்கி அபிவிருத்திகளை முன்னெடுப்பேன்.

**கே: எதற்காக நீங்கள் ஊஞ்சல் சின்னத்தை தேர்ந்தெடுத்தீர்கள்?**

**ப:** ஊஞ்சல் என்பது தமிழர் பாரம்பரியத்தில் தொன்றுதொட்டு வரும் ஒரு அடையாளம். அது சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமே பிடித்தமானதும், பரிச்சயமானதும் கூட. என்னதான் மனதில் கவலை, துன்பம் இருந்தாலும் ஊஞ்சலில் ஆடும் போது எல்லோருக்குமே ஒரு ஆறுதலும், மகிழ்வும், நிம்மதியும் பிறக்கும். அப்படி எமது மக்களுக்கு ஒரு ஆறுதலையும், நிம்மதியையும் நாங்கள் ஏற்படுத்துவோம் என்பதைக் குறிக்கவே ஊஞ்சலை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். நான் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டுமல்லாது மாநகரசபைத் தேர்தலிலும் ஊஞ்சல் சின்னத்தையே தெரிவு செய்திருந்தேன்.

**கே: இப்போது நாடெங்கும் தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவு அலை வீசுவதாகச் சொல்லப்படுகின்றதே. இது பற்றி..?**


**ப:** தெற்கில் வேண்டுமானால் அப்படியான அலைவீசும் நிலை இருக்கலாம். ஆனால் வடக்கு, கிழக்கில் அதற்குச் சாத்தியம் குறைவு. ஜனாதிபதித் தேர்தலில் இங்கு அநுரவுக்கு கணிசமான வாக்குகள் விழுந்திருக்கலாம். ஆனால் அது ஜனாதிபதித் தேர்தலில். இப்போது நடப்பது மக்கள் தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் நாடாளுமன்றத் தேர்தல். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தம் இனம் சார்ந்து, உரிமை சார்ந்து தான் வாக்களிப்பார்கள். அதனால் தான் , தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கூட நேரடியாகத் தேர்தலில் இறங்காமல், தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல எத்தனிக்கிறார். எனவே தமிழ்மக்கள் இப்படி தேசிய மக்கள்சக்தி அலை என்ற மாயைக்குள் சிக்குண்டு போகாமல், யதார்த்தமாகவே சிந்திப்பார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்குண்டு. அப்படி மக்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களித்தால் நாம் நிச்சயம் அவர்களால் தெரிவுசெய்யப்படுவோம்.

**கே: ஒருவேளை உங்கள் கணிப்புக்கு மாறாக இந்தத் தேர்தலில் தோற்றால், அரசியலில் இருந்து ஒதுங்கிவிடுவீர்களா? அல்லது தொடர்ந்து இயங்குவீர்களா?**

**ப:** நான் மாநகரசபையூடாக மக்களுக்கு அறிமுகமாகி, அதன் பின்னரே நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க நினைத்திருந்தேன். ஆனால் அதற்கு மாறாக, நான் திட்டமிட்டமைக்கு முன்னதாகவே நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கவேண்டிய சூழல். இந்தக் குறுகிய காலத்துக்குள் மக்களிடம் எமது கொள்கைகளைக் கொண்டு சென்று வெல்லவே முயற்சிக்கிறோம். அது சாத்தியமாகாவிட்டால், தொடர்ந்தும் நான் மக்களுக்கான அரசியல் பணி செய்வேன்.
குறிப்பாக சில அமைப்புகளை உருவாக்கி, அதனூடாக மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஊட்டுதல், எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் எப்படி அமையவேண்டுமென திட்டமிடல் போன்ற தொலைநோக்கான பணிகளை செய்துகொண்டேதான் இருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் சரஸ்வதி சரவணமுத்து

கீரிமலையை பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட Doctor செல்லையா சர்வேஸ்வரன் (தம்பி மாமா) அவர்கள் 29.10.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் ஜெகதாம்பிகையின் அன்புக்கணவரும், பிரகஸ்பதி (Canada), அபிராமி (Norway), ஜனார்த்தனன் (London), தாட்சாயினி (London), அச்சுதன் (Srilamka) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜீவினி, சாரங்கா, சுஜீவன், பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிஷேகா, ஷாதனா, அனீஷா, ஜனீஷா அக்ஷய், அக்ஷரா, அஷ்வந்த் ஆகியோரின் ஆசைமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.10.2024 புதன்கிழமை மாலை 10.00 மணிக்கு பூதவுடல் கு மணல்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 187 1974

(CS 1745) P-1

# மரண அறிவித்தல்



## தெய்வேந்திரராசா கலாநிதி

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரராசா கலாநிதி நேற்று (29.10.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- கனகம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு திருமதி

கந்தையா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற தெய்வேந்திரராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கராசா, நீலாம்பிகை (தேவி), தர்மசோதி (தயா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2024) புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிறுவிளான்,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1746) P-1

## பணிப்பாளர் நியமனம்

பனை அபிவிருத்தி சபையின் புதிய பணிப்பாளராக விநாயகமூர்த்தி சகாதேவன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார். ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் முன்னிலையில் நேற்று முன்தினம் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

(அ-ம)

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 03 . 1945



தோற்றம்
28 . 10 . 2024

## திருமதி தர்மராணி தனலிங்கம்

(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மராணி தனலிங்கம் 28.10.2024 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- தங்கத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தங்கச்சிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம், தங்கராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - பாக்கியத்தின் அன்பு மருமகளும் திரு. விசுவநாதர் தனலிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும், வத்சலா, விஜயசலா, கௌசலாவின் அன்பு தாயாரும் அகிலன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆரபி, ஆரூரன், அமிழ்திகா, அமிழ்திகனனின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (20.10.2024) புதன்கிழமை காலை 10 மணியளவில் மூளாயில் நடைபெற்று பின்னர் 'பித்தனை' இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

மூளாய் வீதி, மூளாய்
சுழிபுரம்.

தகவல்:
கணவன், குடும்பத்தார்.
0212250334

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 01 . 1958



மறைவு
27 . 10 . 2024

## இந்திராணி லோகநாதன்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இந்திராணி லோகநாதன் கடந்த 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமலிங்கம் நாகபூரத்தினம்மா தம்பதியின் கனிஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவசாமி-நல்லமுத்து தம்பதியின் அன்பு மருமகளும் சிவசாமி லோகநாதன் (SLP) அவர்களின் அன்பு மனைவியும் பிரீத்தா (லண்டன்), பிரதீபன் (பொறியியலாளர்-லண்டன்), கோபிநாத் (பொறியியலாளர்-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலநாயகி, Dr சோமசுந்தரேஸ்வரன் (பேராசிரியர் -அவுஸ்ரேலியா),

ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மங்கையர்க்கரசி, கிருஷ்ணலதா, சுசிலாதேவி, ஏகாம்பரநாதன், தவரஞ்சிதமலர், நகுலேந்திரநாதன், சந்திரநாதன் ஆகியோரின் மைத்துனியும் உமாபாலன் (பொறியியலாளர்-லண்டன்), தயாவாணி, பிரவீணா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மிருனா, பவிஷன், வென்ஷன், வேதிகன், மழவன், குழலி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30.10.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

101, புகையிரத வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.சி.லோகநாதன் (S.L.P)
(கணவர்)

(CR 43536) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முகாமைத்துவ வணிக பீடத்தின் வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் வெள்ளிவிழா மலர் வெளியீடும், 25 வருடங்களுக்கு மேல் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உள்ளிட்ட முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதி பதிகள், பேரவை உறுப்பினர்கள், விரிவுரை யாளர்கள், மாணவர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-25)



## ஆசிரியர்தின விழா

கொடிகாமம், ஒக். 30

சாவகச்சேரி குடும்ப முன்பள்ளிகளின் ஆசிரியர் தினவிழா குடும்ப நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதாமலர் முகுந்தன், தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகன சிங்கம், சாவகச்சேரி குடும்ப முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-25, 159)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.09.1928 மறைவு 26.10.2024

### அமரர் வல்லிபுரம் துரைராசா

சரவணை கிழக்கு வேலனை.

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனசபை உறுப்பினர் துரைராசா சுவேந்திரனின் தந்தையார் வல்லிபுரம் துரைராசா காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

(CS 1744)P-1

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி அனஸ்ரேசியா அந்தோனிப்பிள்ளை தி.கு**

தாளையடியைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி அனஸ்ரேசியா அந்தோனிப்பிள்ளை தி.கு நேற்று (29.10.2024) செவ்வாயக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (30.10.2024) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின்னர். இளவாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


தகவல்:

அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு மகேஸ்வரி



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் புதுவீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மகேஸ்வரி அவர்கள் 29.10.2024 செவ்வாய்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை கனகம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவசிவாயம் கனகம்மாவின் அன்பு மருமகளும் தனபாலசிங்கம், கனகலிங்கம், சுந்தரலிங்கம், அருட்செல்வி, சிவலிங்கம் மற்றும் காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் வளர்மதி, வனஜா, தயாபரன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தர்ஷிகா மற்றும் சுஜீவன், திவ்வியா, கஜாலினி, அவிஷா, விதுர்சன், பவிசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் பத்மநாதன், காலஞ்சென்ற காசிலிங்கம் மற்றும் சாந்தலிங்கம், படியலிங்கம் சந்ததிரதேவியின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30.10.2024) (புதன்கிழமை) அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதியவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 252 0796
077 918 6303

(CS 1747) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
28 . 08 . 1965

மறைவு
30 . 09 . 2024

கடந்த 30.09.2024 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### காளிமுத்து கணேசன் (கொக்குவில்)

இன்று 30.10.2024 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீ லக் ஷ்மி பிளாசா மண்டபத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளை எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை எமக்கு பல வழிகளிலும் உதவிகளைச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயர்பகிர்வோர் குடும்பத்தினர்.
077 50 22 934
075 67 29589

உ
சிவமயம்

## பாண லிங்கேஸ்வரம்

### அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் ஒட்டங்குளம், துனுக்காய்

1. 36 அடி உயரமும் 6 சில்லுகளையும் கொண்ட சித்திரத்தேர் அமைப்பதற்கு
2. 60 அடி நீளமும் 40 அடி அகலமும் 10 அடி ஆழமும் கொண்ட தீர்த்தக்கேணி கட்டுவதற்கு
3. தேர்முட்டி அமைப்பதற்கும்
4. கொடிமரம் – 31 அடி

கூறுவிலை கோரப்படுகின்றது.

10.11.2024 முன்பதாக கிடைக்கக் கூடியதாக

**கூறுவிலை நெறிப்படுத்துனர்**
**சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் ஐயர்**
**நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில்**
**ஒட்டங்குளம், துனுக்காய்**

முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**076 409612**

## 1ஆம் ஆண்டு நினைவு தினம்

### அமரர் செல்வநாயகம் உமாசங்கர் (Babi)

Assistant Manager Alliance Finance Ltd
Chankanai



நீ எம்மைவிட்டு விலகிய நாட்கள், வாரங்களாகி,
மாதங்களாகி இன்றுடன் ஒரு வருடமான
போதிலும் உன்மேல் வைத்த அன்பும்
நீ எமக்காக விட்டுச்சென்ற நினைவுகளும்
எமக்குள் இருந்து உன்னை எண்ணி
எம்மை உருக்கிக் கொண்டிருக்கிறது.
நீ எம்மைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டாய்
என்பதனை நாம் அறிந்த போதிலும் எமது
மனம் அதனை ஏற்க மறுத்து உன்னைக்
காண ஏங்கிக் கொள்கிறது.
வஞ்சகம், ஏமாற்று, துரோகம் நிறைந்த இவ்
உலகில் நீ வாழ்வது கடினமென நினைத்து
இறைவன் உன்னை அழைத்தானோ
உதவி செய்வதற்கு உதாரணமானவன் நீ
ஆனால் உனக்காக நாம் எதையும் செய்யும்
முன்பே எம்மை விட்டுப் பிரிந்து நீங்காத
துன்பத்தில் பரிதவிக்க விட்டது ஏனோ?

**இறைவா மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடு எம்மில்**
**ஒருவனாக அவன் எம்முடன் வாழ்வதற்கு**
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**“வீரபத்திரர் கோவிலடி”**
**சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

(CS/56563) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 01 . 1952

மறைவு
27 . 10 . 2024

### செல்லையா பரஞ்சோதி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பரஞ்சோதி அவர்கள் (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து – செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், செல்லத்தரை, சறோஜினிதேவி, செல்வரத்தினம் (ஆசிரியர்), சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கோகிலலஷ்சுமி, இரத்தினம், இராஜேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நித்தியானந்தன், விஜேந்திரன், ஜெயக்குமார், சதீஸ்குமார் மற்றும் காலஞ்சென்ற ராஜ்குமார் ஆகியோரின் மாமியாரும் நிசாந்தன், சோபா, பிரதீபன், நிசாந்தினி, துசியந்தன், பிரசாந்தினி, பிரகாஸ், டனோஸ், தினேஸ், தர்மினி, நிருசா, சதுர்சா, சந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லிவியான், லடிணேஸ், யாத்வி, நஸ்மிக்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2024) புதன்கிழமை இல.10 பொன்னம்பலம் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 அளவில் அரியாலை இந்து சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரியாலை,
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
077 2247427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவுசெய்தல் - 2025

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2025ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா.1,000.00 எமது அலுவலக காசாளரிடம் செலுத்தி அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, வங்கி கணக்கிற்கு (7040260 Boc Jaffna branch) வைப்பு செய்து விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல்-2025"எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 30.11.2024ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ் போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் www.thjaffna.lk பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொதுப்பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTVகமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள், நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சுகலவிதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள், பார் சவர்க்காரம், சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லாவிதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிர்க்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சுகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை, திகமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுறெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதியினர், சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாளஅட்டை மற்றும் பெயர்ப் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ் உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப் பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலகஉபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம்,புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக் குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |
| C - 13 | கழிவுகளை அகற்றுதல் தொடர்பான சேவை |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிடநிர்மாணம், கட்டிடபுனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

## விதிமுறையும் நிபந்தனைகளும்:

01. வழங்கல்கள், சேவைகள் 2025 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

02. 30.10.2024 ஆம் திகதி முதல் 30.11.2024 திகதி வரையான வேலைநாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரையான அலுவலக நேரத்தில் சிறாப்பர் பிரிவில் பண வைப்பக்களை மேற்கொள்ளலாம். எக்காரணம் கொண்டும் காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

03. வருகை தந்து பணத்தை செலுத்த முடியாத வழங்குநர்கள் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம் பெயரில் இலங்கை வங்கி யாழ்ப்பாண கிளையில் பேணப்படும 7040260; எனும் கணக்கிலக்கத்திற்கு 30.11.2024 ஆம் திகதி வரையில் மட்டும் வைப்பு செய்யலாம் (குறித்த பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்) பணத்தை வைப்புச்செய்யகூடிய இறுதி நாள் 30.11.2024 ஆம் திகதி என்பதுடன் அந்த திகதியின் பின் பதிவுசெய்து கொள்வதற்காக பணம் வைப்புச் செய்யும் நிறுவனம் எக்காரணம் கொண்டும் பதிவுசெய்து கொள்வது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

04. பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்தின் 17.12.2019 ஆம் திகதிய சுற்றுநிருபம் PFD Circular No 08/2019 இன் 2.3 அத்தியாயத்தின் பிரகாரம் இந்த நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ளும் சகல வழங்குநர்களும் WWW.promise.lk அரச இலத்திரனியல் பெறுகை முறைமையின் (Electronic Government Procurement – EGP) கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொள்வதால் அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினதும் பெறுகைகளில் கலந்து கொள்வதற்கு வழங்குநர்களிற்கு வாய்ப்பு கிட்டும்.

05. விண்ணப்பதாரர்கள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்யப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தின் தொலைபேசி, தொலைநகல், மற்றும் மின்னஞ்சல் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும். (வணிகப் பதிவின் நகல் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

06. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளிமூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

07. ஏதேனும் சந்தர்ப்பங்களில் பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகள் திருப்திகரமாக இல்லை என தெரியவரும் போது காரணங்கள் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.

08. பொருட்கள் மற்றும் சேவைகளை ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.

09. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.

10. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

11. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது, வியாபாரப் பெயர் பதிவுச் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள்களும் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையானஅனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.

12. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

13. உருப்படி இலக்கம் B [அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள்ஸ க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
    - A). தயாரிப்பு எல்லை [Product range]
    - B). உற்பத்தியாளர் அங்கீகாரக் கடிதம் [Copy of manufacturer authorization letter]
    - C). CDDA நகல்
    - D). நிறுவுதல் அடிப்படை -[Installation Base] (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்)

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

*மாதிரிவிண்ணப்பப்படிவம்*

| | |
|---|---|
| பதிவு செய்யும் வகை: | |
| தொகை: (ரூபா.) | 1,000.00 |
| திகதி: | |

வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்தல் - 2025
போதனாவைத்தியசாலை,யாழ்ப்பாணம்.

1.நிறுவனத்தின் பெயர் :- ..........................
2.நிறுவனத்தின் முகவரி :- ..........................
3.தொலைபேசி இல. :- ..........................
4.தொலைநகல் இல. :- ..........................
5.மின்னஞ்சல் முகவரி (அலுவலகம்) :- ..........................
6.வியாபாரப் பதிவுப் பெயர் :- ..........................
7.VAT:பதிவு இலக்கம் :- ..........................
8.கடன் வசதி பற்றிய விபரம் (கால எல்லை/தொகை) :- ..........................
9. ஆவணங்களின் பட்டியல் :- ..........................
(விபரப் பட்டியல் இணைக்கப்படுதல்)

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவைவிபரம் | இணைப்பு இல. |
|---|---|---|
| 1 | வியாபாரச் சான்றிதழ் வன்பிரதி | |
| 2 | பொருட்கள் சேவைகள் விபரம் (Make, Model, Brand) | |
| 3 | Manufacturer Authorization Letter (Soft Copy in CD) | |
| 4 | CIDA /CCDA/NMRA latest Registration (Soft Copy CD) | |
| 5 | Last two years history of supply / works (Annex copy of orders or letter of Acceptance from government & private institutes ) (soft copy CD) | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன்.

விண்ணப்பதாரியின் பெயர்:- ..........................
விண்ணப்பதாரியின் ஒப்பம்:- ..........................
திகதி:- ..........................
நிறுவன இறப்பர் முத்திரையும் திகதியும்:- ..........................

**Note: Combine all documents along with CD and submit in an envelope for each category separately**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளித் திருநாள்

யாழ்ப்பாணம், ஒக். 30
சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் தீபாவளித் திருநாள் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் சங்க ஆராதனை மண்டபத்தில் நாளை வியாழக் கிழமை பி.ப 3மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோ வன் பிரதம விருந்தி னராகவும், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேச சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர். (ரி)

# அபிவிருத்தியும் உரிமையும் தமிழ்மக்களுக்கு அவசியம்



## சரவணபவன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.30**

**அபிவிருத்தி மற்றும் உரிமை என இரண்டையும் சம அளவில் முன்னெடுப்பதே எனது நோக்கு என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சுயேச்சைக் குழு - 14 இன் வேட்பாள ருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

பொன்னாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில், ஈ. சரவணபவன் தனது திட்டங்கள் தொடர்பில் மக்கள் முன் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;
பொருளாதார முன்னேற்றம், கல்வி வளர்ச்சி மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் மாற்றங்களைக் கொண்டு வர மாம்பழச் சின்னம் உங்களின் வாக்குக்காக காத்திருக்கிறது. தமிழர்களின் தேசிய உரிமையையும் அபிவிருத்தியையும் தேசியத்தையும் இணைத்துக் கொண்டு செல்வேதே எனது நோக்கு. நாடாளுமன்றத் தேர்தலை தாண்டியும் எனது சேவைகள் இந்த மண்ணில் தொடரும் - என்றார். (ச-125)

# மாணவர்களை இலக்குவைத்து போதைமாத்திரை விற்பனை!

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 30
பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சுன்னாகம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞரின் உடைமையில் இருந்து போதை மாத்திரைகள் சில மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-23)

# பிரசார அணி மீது தாக்குதல் சந்தேகநபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அணியினர் மீது வன்முறைத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த சனிக்கிழமை நீர்வேலி பகுதியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியினர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, முச்சக்கர வண்டியில் வந்த நால்வர் அடங்கிய கும்பல் தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் அங்கிருந்து சென்று மீண்டும் சுமார் 30 பேருடன் வந்து பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தினர்.
சம்பவத்தில் பெண் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் மற்றும் தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் தரப்பினர் ஆகியோரால் பரஸ்பர முறைப்பாடுகள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டன. அதனை அடுத்து பொலிஸார், தாக்குதலுக்கு இலக்கான மூவர் மற்றும் தாக்குதலை மேற்கொண்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் என 8 பேரையும் கைதுசெய்து யாழ் . நீதிவான் நீதிமன்றில், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்படுத்தினர்.
இதன்போது அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (ச-20)

## விரிவாக்கம்...

விமான நிலையத்தின் விமான ஓடுபாதையை விரிவாக்கவது தொடர்பாகவும் அனைத்து விதமான சர்வதேச விமானங்களும் வந்து செல்லக் கூடியவகையில் விமான ஓடுபாதை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது.
விமான நிலைய அபிவிருத்தி, விமான நிலைய உட்கட்டுமான அபிவிருத்தி, விமான நிலையத்துக்கு வரும் பயணிகளின் நலன் சார்ந்த உட்கட்டமைப்பு வசதி வாய்ப்புகள் அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. விமான நிலையத்துக்கு வந்தடைந்த பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்ளாதவாறு விமான நிலையம் மட்டுமன்றி சுற்றியுள்ள பிரதேசத்தின் வீதி அபிவிருத்தி செய்தல், வீதி மின் விளக்குகள் பொருத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய பிரதேசசபைக்கு ஆளுநரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.
1986 ஆம் ஆண்டு விமான நிலையத்துக்காக ஒப்படைக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளுக்கான இன்றைய பெறுமதியை காணி உரிமையாளர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் விமான நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டமிடல் தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்டச் செயலர். தெல்லிப்பழை பிரதேச செயலாளர், கோப்பாய் பிரதேச செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர் மற்றும் விமான நிலையத்துக்குரிய பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ-ஒ-26)

## சாவகச்சேரி...

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக, கொழும்பு பொலிஸ் அவசர சேவைப் பிரிவினருக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையைத் தொடர்ந்து, அங்கிருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே யாழ்ப்பாணம் சாவகச்சேரி நீதிமன்றத்தின் பாதுகாப்பு பல மடங்கு உயர்த்தப்பட்டது. பொலிஸாருடன் சிறப்பு அதிரடிப்படையினரும் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.
கடும் சோதனைகளுக்குப் பின்னரே நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த திடீர் சோதனைகளாலும், கண்காணிப்புகளாலும் சாவகச்சேரி நீதிமன்ற வளாகம் நேற்றுப் பதற்றத்துக்குள் ஆட்பட்டிருந்தது.
இதேவேளை - கடந்தவாரம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்படப் போவதாகப் பதிவுத் தபாலில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்திலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## விபத்தில்...

கல்லூரிக்கு அருகாக கார் ஒன்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## பெற்றோல்...

காணக்கூடியதாக உள்ளது. மாதத்தின் இறுதியில், எரிபொருள் சூத்திரத்தின் அடிப்படையில் சில விலைமாற்றங்கள் ஏற்படலாம் என்பதால், விற்பனை நிலையங்கள் பெற்றோலின் இருப்பை சரிவரப் பேணாமையால்தான் இந்த எரிபொருள் பற்றாக்குறை செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம)

## காணி...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான கனகரத்தினம் சுகாஷ், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சிவஞானம் சிறீதரன் ஆகியோரும், பொதுமக்கள் பலரும் இணைந்து வெளிப்படுத்திய எதிர்ப்பைத் தொடர்ந்தே இந்தக் காணி சுவீகரிப்பு முறியடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## இலங்கைக்கு...

பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்குரிய அங்கத்துவத்தை நாம் கோரியிருந்தோம். இது தொடர்பில் மேற்படி அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களிடம் எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தோம்.
பிரிக்ஸ் அமைப்பில் 9 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அந்த நாடுகளின் தலைவர்கள், பிரிக்ஸ் அமைப்பை விஸ்தரிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இதனால் எந்தவொரு நாட்டுக்கும் புதிதாக இணையும் வாய்ப்புக் கிட்டவில்லை. எனினும், பங்குடமைக் கட்டமைப் பொன்று ஸ்தாபிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.
இதேவேளை - பிரிக்ஸ் அமைப்பில் இலங்கை இணைவதை எந்தவொரு அங்கத்துவ நாடும் எதிர்க்கவில்லை. அந்த அமைப்பை விஸ்தரிப்பதில்லை என்ற முடிவால்தான் வாய்ப்பு தற்காலிகமாக இல்லாமல் போயுள்ளது - என்றார். (அ-ச-44)

## யானை...

வி.கேதீஸ்வரன் (வயது -24) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
குறித்த இளைஞரும் அவரது நண்பரும் நேற்றுக் காலை காட்டுப்பாதையூடாகச் சென்றபோதே வீதியின் கரையில் நின்ற யானை திடீரெனத் தாக்கியுள்ளது. இதையடுத்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110-35)

## ஆசிரியர்...

ஆசிரியர்கள் இல்லாமல் பெரும் பின்னடைவை கற்றலில் எதிர்கொண்டுள்ளனர் என்றும், ஆதலால் விரைவில் இந்த ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி பெற்றோராலும் மாணவர்களாலும் பாடசாலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. (அ-ம-25-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் ஈடேறாது!

## அநுரகுமார கூறுகின்றார்



**கொழும்பு, ஒக்.30**

**அறுகம்பே சம்பவத்தை அடிப்படையாக வைத்தேனும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா என எதிரணிகள் சிந்தித்துக்கொண்டுள்ளன. அவ்வளவு எளிதில் இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியாது. நாட்டை மீட்டெடுக்கும் வரை எம்மை வீழ்த்த முடியாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் டொலரின் பெறுமதி 400 ரூபாவரை செல்லும் என பிரசாரம் செய்தனர். இன்று அவ்வாறு நடந்துள்ளதா? இல்லை.

எமது பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதித்துடன் பேச்சு நடத்திவருகின்றனர். சாதகமான பிரதிபலன் கிட்டியுள்ளது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுவருகின்றன. எமது ஆட்சியில் அஸ்வெசும இல்லாமல் செய்யப்படும் என்றனர். அதுவும் நடக்கவில்லை. அன்று கூறிய அனைத்தும் பொய்யென உறுதியாகியுள்ளது. எனவே, பொய்களை நம்பி எவரேனும் ஏமாந்திருந்தால் அவர்களும் இன்று உண்மையை உணர்ந்திருப்பார்கள். எமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை மக்கள் வழங்குவார்கள்.

இதனால் சிலர் குழம்பிபோயுள்ளனர். ஏதேனும் சிறு சம்பவம் நடந்தால்கூட ஆட்சி கவிழுமா என எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர்.

அறுகம்பே சம்பவம் தொடர்பில் அனைவரும் ஊடக சந்திப்புகளை நடத்துகின்றனர். அதன்மூலமாகவேனும் ஆட்சி கவிழுமா என்ற சந்தோசத்தில் அவர்கள் உள்ளனர். மூன்று வாரங்களுக்கு முன்னரே எமக்கு தகவல் கிடைத்தது. அதையடுத்து சுற்றுலாத்துறையும் பாதிக்காத வகையில் திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்கும் அதேவேளை திட்டமிட்டவர்களையும் கைதுசெய்வதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது-என்றார்.

(எ-44)

# மாவீரர்களின் தியாகங்கள் அரசியல்வாதிகளுக்கு தீனி

யாழ்ப்பாணம், ஒக்.30

மாவீரர் நாள் தற்போது நெருங்கி வருகின்றது. இந்தக் காலகட்டத்தில் மாவீரர்களின் தியாகங்கள் வியாபாரம் ஆகி அரசியல்வாதிகளுக்குத் தீனி ஆகிவிட்டது. அரசியல்வாதிகள் தமது அரசியலைப் பார்க்க வேண்டுமே தவிர மாவீரர்களின் தியாகங்களை வைத்து அரசியல் செய்யக்கூடாது.

-இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் போராளி குலசிங்கம் நவகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் நலன்களுக்காக மாவீரர்களின் தியாகங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவில் அரசியல்வாதிகள் இருப்பதை தவிர்த்து மாவீரர்களின் பெற்றோரை அதில் போடவேண்டும். அரசியல்வாதிகள் தமது சமகால அரசியலைப் பார்க்கவேண்டும். மாவீரர்களின் தியாகங்களை வைத்து அரசியல் செய்ய முற்படக்கூடாது. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வீட்டுக்கு வந்து தமக்கு வாக்களியுங்கள் என்பார்கள். அதற்குப் பின்னர் எவரும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். எனவே அரசியல்வாதிகள் தமது அரசியலைப் பார்க்கவேண்டுமே தவிர மாவீரர்களின் தியாகங்களை வைத்து அரசியல் செய்யக்கூடாது - என்றார். (ச-20)

# அபிவிருத்தியை அடைய அணிதிரள்க

*ஈ.பி.டி.பி.வேட்பாளர்*
*மனோகரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ் .மாவட்டத்தை இலங்கை யின் அடுத்த பிரதான அந்நியச் செலாவணியை ஈட்டும் வர்த்தக பிராந்தியமாக கட்டமைக்க தமிழ் மக்கள் அணிதிரண்டு வாக்களிக்கவேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் கிருஸ்ணபிள்ளை மனோகரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழ் மக்களின் பிரதேசங் களை அபிவிருத்தியால் கட்டியெழுப்பவேண்டும் என்பது அவசியம். குறிப்பாக யாழ்.மாவட்டத்தை இலங்கையின் அடுத்த பிரதான அந்நியச் செலாவணியை ஈட்டும் வர்த்தக பிராந்தியமாக கட்டமைக்க வேண்டும்.கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கொள்கைகளின் பின்னால் மக்கள் இம்முறை அணி திரண்டு அவருக்கு அதிகப்படியான அரசியல் பலத்தை வழங்கினால் அது சாத்தியமாக்கப்படும்.

எமது அரசியல் செயற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கும் பொறிமுறைகளையும் நாம் வெளிப்படையாகவே கூறுகின்றோம். இதை மக்கள் ஏற்று இம்முறை அணிதிரண்டு எமது சின்னமான வீணைக்கு வாக்களித்து எம்மை அரசியல் பலம் மிக்கவர்களாக்க வேண்டும்– என்றார்.

(ஞ-27)

SPOKEN & GRAMMAR ENGLISH Classes
Grade 7 to GCE OL, Advanced level, Graduates தொழில் புரிவோர்
பேசிப்பழக சிறந்த வகுப்புகள்
யாழ் இந்து வீதியில்
K.Ganesh B.A 077 766 8725
(cr43352) (N-1)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
- இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள இரும்புக்கடை ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை
➤சிட்டை எழுதுபவர்
➤பொருட்கள் வழங்கும் உதவியாளர்
தொடர்பு: 075 617 8008

கணினி வடிவமைப்பாளர் தேவை
யாழ்நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு முழுநேர / பகுதி நேர (இரவு) கணினி வடிவமைப்பாளர் (Graphic Designer) தேவை.

(பல்கலைக்கழகம் படிக்கும் மாணவர்களும் / பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்)
ஆர்வமுள்ளவர்கள் 01.11.2024 ஆம் திகதி
* காலை - 9.00 - 12.00
* மாலை - 06.00 - 8.00
நேரில் சமுகம் தரவும்
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

1ம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும்
85 வது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வும்

தேச கீர்த்தி லயன்
சரவணமுத்து ஆறுமுகநாதன்
காலம் :- இன்று 30.10.2024 புதன்கிழமை
நேரம் :- மாலை 4.00 மணி
இடம் :- மல்லாகம்/ தெல்லிப்பழை அரிமாக் கழக தொழிற்பயிற்சி மண்டபம்
பேரன்புடையீர்,
இறைபதம் அடைந்த
தேச கீர்த்தி லயன் சரவணமுத்து ஆறுமுகநாதன்
அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும், 85வது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வும், திருவுருவப்பட நிறுவுதல் நிகழ்வும் இன்று 30.10.2024 புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.
இவ் விழாவில் அன்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.
தலைமை
லயன் T.சுபராம்
(தலைவர், மல்லாகம்/ தெல்லிப்பழை அரிமாக் கழகம்)
ஆசியுரை
சிவ ஸ்ரீ சு.செந்தில்ராஜக்குருக்கள்
(பிரதம குரு, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)
பிரதம விருந்தினர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)
சிறப்பு விருந்தினர்
லயன் M.K பத்மநாதன் PMJF
(வடபிராந்திய தொடர்பாடல் அதிகாரி, சர்வதேச லயன் மாவட்டம் 306 B1)
கௌரவ விருந்தினர்
திரு ஐ.சிவலோகநாதன்
(இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர்)
நன்றியுரை
லயன் G.அபயன்
(பொருளாளர், மல்லாகம்/ தெல்லிப்பழை அரிமாக் கழகம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-விழா ஏற்பாட்டாளர்கள்-
(CS/546561) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மெயில் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.